DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 239/2015 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for Prosecution | : | P.W.4 |

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : துளசிராம் | தொழில் | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : ரவிந்தரன் | ஜாதி | |
| கிராமம் | : | இனம் | |
| தாலூக்கா | : | வயது | |
| Mail ID | : | Mobile No. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 07.08.2025.

முதல் விசாரணை

நான் தற்போது நீலகிரி மாவட்டம் ஊட்டி டவுன் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன் உடுமலை காவல் நிலையம் குற்றபிரிவில் காவலராக பணியில் இருந்த போது கடந்த 31.07.2013 ம் தேதியன்று நானும் காவலர் ரங்கநாயகம் ஆய்வாளர் முருகையன் என்பவரும் ரோந்துபணியில் இருந்த போது தாராபுரம் ரோடு ரங்கநாதன் கல்யாண மண்டபம் அருகே கண்காணித்த போது பல்சர் வாகனத்தில் வந்தவரை பிடித்து விசாரித்த போது அவர் முன்னுக்கு பின் முரணாக கூறிய போது விசாரணை செய்த போது அவர் தனது பெயரை மாதவன் என்கிற கண்ணன் என்றும் திருப்பத்துார் சிவகங்கை மாவட்டத்தை சேர்ந்தவர் என்றும் கூறினார். தாலி செயின் , செயின் பறிப்பு வழக்குகளில் சம்பந்தப்பட்டிருப்பதாக கூறியவர் உடுமலை ஜீவா நகரில் புருசோத்தமன் என்பவருடன் சேர்ந்து செயின் பறிப்பு செய்ததாக ஒப்பு கொண்டு வாக்குமூலம் அளித்தார். பழனியில் அடகு வைத்து நகை கடையை காண்பித்தார். நகையை அடமானம் பெற்று வந்த பணத்தில் ஒரு செல்போன் வாங்கிய செல்போனை எடுத்து ஆஜர் செய்தார். காவல் ஆய்வாளர தயார் செய்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும் காவலர்

ரங்கநாயகமும் சாட்சி கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1 வது கையெழுத்து என்னுடையது தான். அந்த கையெழுத்து மட்டும் அசா.ஆ.3 என குறியீடு செய்யப்படுகிறது.

என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள 1 வ து கையெழுத்து என்னுடையது தான். கைப்பற்றுதல் மகசர் அசா.ஆ.4 என குறியீடு செய்யப்படுகிறது. காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரி தரப்பில் எதிரியே ஆஜராகி குறுக்கு விசாரணை

1. மாதவன் (எ )கண்ணன் என்பவரை தாராபுரம் ரோட்டில் எங்கு வைத்து கைது செய்ததிர்கள் என்றால் ரங்கநாயகம் கல்யாண மண்டபம் பஸ் ஸ்டாப்பில் வைத்து. வழக்கின் சம்பந்தப்பட்ட நகையை அந்த இடத்தில் வைத்து கைப்பற்றபட்டதா என்றால் இல்லை. உயர் அதிகாரி வேண்டுகோளுக்கு இணங்க பொய்யாக சாட்சியம் சொல்கிறிர்கள் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T. Nithyakala, B.Com.,B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.